எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைகள்தான் இந்த மண்ணில் பிறக்கையிலே! அது நல்லவராவதும், தீயவராவதும் அவரது அன்னை வளர்ப்பினிலே என்பது ஆழமான கருத்துகளாகும் என்பதை நாம் உணர வேண்டும்.

சிறு குழந்தையாக வளரும் போது, சிறு குழந்தைகள் எந்த ஒரு நிலையையும் அறிந்து கொள்ள முடியாதவர்கள். ஆகையால் அவர்களுக்கு தெரிந்தது எல்லாம் சிரிப்பு, மழலைச் சுட்டித்தனம், எதையும் மிக எளிதாக கற்றுக் கொள்ளும் ஆர்வம் போன்றவைதான். சிறு குழந்தைகளுக்கு வெறுப்பு, கோபம், மதம், இனம், பயம், பணம், புகழ், பொருள் போன்ற எந்த நிலையும் அறிந்து கொள்ள முடியாதவர்களாய் வளர்கிறார்கள். கடவுளுடைய படைப்புகளில் பல அர்த்தங்களும், பலவிதமான அற்புதங்களும் நிறைந்துள்ளன. அதில் ஒன்றுதான் இந்த மனிதகுல படைப்பாகும். அந்தப் படைப்புகளில் ஒன்றுதான் சிறிய குழந்தையாக இந்த மண்ணில் உருவாகி காலம் கடந்து செல்ல செல்ல ஒவ்வொன்றாக கற்றுக் கொள்கிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

✠ <u>பிறப்பன - இறக்கும்</u>

பிறந்தன இறக்கும் இறந்த பிறக்கும்,

தோன்றினை மறையும் மறைந்த தோன்றும்,

பெருத்தன சிறுக்கும் சிறுத்தன பெருக்கும்,

உணர்ந்தன மறக்கும் மறந்தன உணரும்,

புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்

உவப்பான வெறுப்பாய், வெறுப்பன உவப்பாய்

ஆகையால் இந்தப் பாடல் மூலம் நமது முன்னோர்கள் நமக்கு கூறிய வரிகள்

உலகம் என்பது நிலையில்லாதது என்பதை நாம் உணர வேண்டும்.

நாளுக்கு நாள் மாறிக்கொண்டேயிருப்பது. அதில் வாழும் உயிர்களும், பரிணாம மாற்றத்திற்குட்பட்டு இறந்தும், பிறந்துமாய் உலகில் சமநிலையை உண்டாக்கிக் கொண்டுவரும், எந்த உயிருக்கும் இந்த மண்ணில் நிரந்தர இடம் இல்லை என்பதை நாம் உணர வேண்டும்.

**பிறக்கும் எல்லா உயிர்களும் ஒரு நாள் இறந்தாக வேண்டும் என்பதே நியதி.** சரி பிறந்தவன் இறந்து விட்டால் அந்த உயிர் முற்றுப்புள்ளியாகி விட்டதா? என்றால் அதுதான் இல்லை. அப்படி பிறந்த உயிர் தனது பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப மறுபடியும் ஜனனமெடுக்கும் என்பது தான் நியதியாகும். ஆகையால் இதன் மூலம் நமது சந்ததிகளுக்கும், குழந்தைகளுக்கும், பெற்றோர்கள் மற்றும் நாம் அனைவரும் பிறந்தன இறக்கும் என்பதை எடுத்துக்கூறியும், இவ்வுலகில் நம்மால் உருவாக்கும் பொருட்களான பணம், பதவி, பொருள் என்ற எந்தப் பொருட்களும் யாருக்கும் சொந்தமில்லை என்பதை எடுத்துரைக்க வேண்டும்.